# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.187/2021</u>

2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள் வியாழன்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய எ.**ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவீன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். விபத்தில் இறந்துபோன முருகேசன் என்பவருடைய பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.1 ஆகும். ABC மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.2 ஆகும். எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 நகல் என்பதால் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>

என்னுடைய வழக்கறிஞருக்கு எதிருரை தாக்கல் செய்ய நான் தான் விவரம் சொன்னேன். மதுபோதையில் வாகனத்தை ஓட்டிவந்ததாக நான் பதிலுரையில் சொல்லவில்லை. முதல்முறையாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் மதுபோதையில் வந்ததாக சொல்வதால் அது

ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் 3-ம் தரப்பினர் என்றால் சரிதான். 3-ம் நபருக்கு எங்கள் பாலிசியில் கவரேஜ் உள்ளது. நாங்கள் மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. அவர் மதுபோதையில் இருந்தார் என்பதற்கான மருத்துவ ஆவணம் எதுவும் இல்லை என்றும், இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் முழுவிவரம் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த முருகேசன் எந்தெந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் அதிவேகமாக ஒட்டிவந்து விபத்து ஏற்படுத்தினார் என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை**

இல்லை.